முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.7/2019

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன் படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பி.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது கஸ்ஸாலி | ஜாதி | |
| தந்தையார் பெயர் | அப்துல்கபூர் | மதம் | |
| கிராமம் | நீடாமங்கலம் | தொழில் | |
| வட்டம் | நீடாமங்கலம் | வயது | 59 |

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதி. 2 முதல் 4 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரிகள். அவர்களுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்குமாறு வேண்டுகிறேன்.

30.08.2014 தேதியிட்ட தான் ஜமாத்தார் முடிவிற்கு கட்டுப்படுவதாக வாதி ரசூல்தீன் மற்றும் பிரதிவாதிகள் கையெழுத்து போட்டுக் கொடுத்த ஆவண நகலை தாக்கல் செய்கிறேன்.

1) 29.01.2015 தேதியிட்ட ஆவணம் அசல் **பி.சா.ஆ.2** (வாதி தரப்பு வழக்கறிஞர் வாதியின் கையொப்பம் அந்த ஆவணத்தில் இல்லையென்றும் ஆவணம் பதிவு செய்யப்படவில்லையென்றும் ஆட்சேபனை செய்து ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).

1-ம் பிரதிவாதி, வாதியிடம் திருமண மண்டபத்தை ஒப்படைக்கும் போது 1-ம் பிரதிவாதி கொடுத்த கணக்கு நகல் தாக்கல் செய்கிறேன்.

பகுதி பாகபிரிவினை வழங்க சட்டத்தில் இடமில்லை என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI

Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.10.05 18:31:28 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.